Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 262/2022** |
| Deposition of witness for | :: | **PW. 7** |
| Name | :: | **அரவிந்த் பாபு (மருத்துவர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

1 மற்றும் 2 எதிரிகள் இறந்துவிட்டனர். 3 எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4 வது எதிரி ஆஜர். 3,4 வது எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

08.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரியில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.02.2021ம் தேதி காலை 10.35 மணியளவில் விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக அவசர பிரிவில் நான் பணியில் இருந்த போது, அன்றை தினம் காலை 10.35 மணியளவில் லட்சுமணன் என்ற நபரை அவருடைய அண்ணன் மகனான முத்துக்குமார் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்த போது, லட்சுமணனை தெரிந்த நபர்கள் 8 பேர் அன்று காலை 09.30 மணிளவில், அவரின் வீட்டின் அருகே வைத்து கட்டையால் தாக்கியதாக லட்சுமணன் என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தன.

**i)** இடது பக்க தலையில் 3x 0.5x 0.5 cm அளவிலான சிதைந்த காயம் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

**ii)** இடது கை கட்டைவிரலில் எலும்பு முறிந்த நிலையில் காணப்பட்டது.

**iii)** சிராய்ப்பு காயம் இடது பக்க மேல் கையில் பின்புறம் காணப்பட்டது.

2. ஆகையால் அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை

அளிக்கப்பட்டது. பின்னர் அவருக்கு எலும்பு சிகிச்சை நிபுணர் அளித்த காயச்சான்றின் படி அவருக்கு இடது கை கட்டைவிரலில் உள்ள எலும்பு நகண்டு உள்ளதாக கூறியிருந்தார். எனவே, அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. மேலும் அன்றை தினம் மதியம் 01.30 மணியளவில் அழகேஸ்வரி என்ற நபரை அவருடைய சகோதரி என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்த போது, அழகேஸ்வரி, தெரிந்த நபர்கள் 5 பேர் அன்று காலை 10.30 மணிளவில், அவரின் வீட்டின் அருகே வைத்து கட்டையால் தாக்கியதாக அழகேஸ்வரி என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தன.

i) வலது பக்க தலையில் வீக்கக்காயம் காணப்பட்டது.

ii) தலைவலி இருப்பதாக என்னிடம் கூறினார்.

iii) இடது பக்க கையில் நக கீரல் (சிராய்ப்பு காயம்) காயம் காணப்பட்டது.

4. ஆகையால் அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுதன்மை கொண்ட காயம் என்று நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. மேலும் அன்றை தினம் மதியம் 01.35 மணியளவில் முத்து என்ற நபரை அவருடைய சகோதரி என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்த போது, முத்து, தெரிந்த நபர்கள் 4 பேர் அன்று காலை 10.30 மணிளவில், அவரின் வீட்டின் அருகே வைத்து கட்டையால் தாக்கியதாக முத்து என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தன.

i) வலது பக்க தோள்பட்டை, வலது பக்க இடுப்பு, வலது முதுகுபக்கம் வலி இருந்ததாக என்னிடம் கூறினார்.

ii) இடது பக்க கையில் நக கீரல் (சிராய்ப்பு காயம்) காயம் காணப்பட்டது.

6. ஆகையால் அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுதன்மை கொண்ட காயம் என்று நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடுடன் கூடிய**

**காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. மேலும் அன்றை தினம் மதியம் 02.15 மணியளவில் முத்துக்குமார் என்ற நபரை தானாக என்னிடம் சிகிச்சைக்காக வந்த போது அவரை தெரிந்த நபர்கள் 6 பேர் அன்று காலை 10.00 மணிளவில், அவரின் வீட்டின் அருகே வைத்து கட்டையால் தாக்கியதாக முத்துக்குமார் என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது கீழ்க்கண்டவாறு கூறினார்.

i) இடது பக்க நெஞ்செலும்பு பகுதியில், இழுத்து மூச்சுவிடும் போது வலி இருப்பதாக என்னிடம் கூறினார்.

8. ஆகையால் அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுதன்மை கொண்ட காயம் என்று நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் முதல்விசாரணையில் கூறிய காயங்கள் ஆனது தவறுதலாக அவர்கள் வைத்திருந்த கம்பு அவர்கள் மீது பட்டு நான் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்புஉள்ளது. லட்சுமணனுக்கு ஏதேனும் எக்ஸ்ரே எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. அவை எனது வசம் உள்ள மருத்துவ ஆவணங்களில் உள்ளது. போலீசார் விசாரணையில் போது என்னிடம் கேட்டக்கவில்லை. ஆனால் நான் அதனடிப்படையில் தான் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன்.

**மறுவிசாரணை இல்லை.**